(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த நிகழ்ச்சிகளுக்குச் செல்லுமுன் இந்தப் பேரவைக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். பொதுவாக சட்டப் பேரவையின் விதி முறைகள், உரிமைகள் எல்லாம் காக்கப்படுகின்றன. அதுவும் தமிழ்நாட்டு சட்டமன்றத்தில் எந்த அளவிற்கு உரிமைகள் இருக்கின்றன, காக்கப்படுகின்றன என்பதை சற்று நேரத்திற்கு முன்னால் ஒற்றிவைப்புத் தீர்மானங்களின் மீது நடந்த விவாதம் தெரியப்படுத்தும். அவை அவ்வளவும் விதி முறைகளுக்கு உட்பட்டவை அல்ல என்பது பேரவைத் தலைவருக்குத் தெரியாதது அல்ல, அரசுக்கும் தெரியாதது அல்ல. இருப்பினும் அவர்களது எண்ணங்களை, கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக மிகத் தாராளமாக நடந்து கொள்கிற இந்தச் சட்டமன்றத்தில் ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டவேண்டும் என்பதற்காக, அடிக்கடி வாக்-அவுட் செய்யப்படுகின்றது. அதை அரசாங்கத்தின் மீதுள்ள குறை என்று நான் கருத மாட்டேன், சட்டப் பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் எல்லாக் கட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இங்கு பல கட்சிகள் இருக்கின்றன. ஏதாவது ஒரு முகாந்திரத்தைக் காட்டி வெளிநடப்பு செய்வது என்பது சட்டமன்ற உரிமைகளுக்குக் கட்டுப்பட்டதா என்பதைப் பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களும் இப்போது கூட அல்ல, பொதுவாக அதுபற்றிய ஒரு முடிவிற்கு வந்தால் வெளி உலகத்திற்கு நல்லதாக அமையும் என்ற என் கருத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

(6) உறுப்பினர்கள் தாங்கள் கொடுக்கும் தீர்மானங்களை விளக்க வாய்ப்பு கோருதல்.

DR. H. V. HANDE: I want to make a suggestion to the House and the Government. So many times we give notices of adjournment motions and call attention motions and we do not criticise the Hon. Speaker for rejecting them because we cannot criticise him, and we are so helpless in the matter. For instance, I have given notice of five motions but they have all been rejected.

So, will it be possible for the Hon. Speaker before rejecting these motions to tell the Members concerned that he is going to reject them for certain reasons ? Now suddenly we get a letter rejecting them. If we are given an opportunity to explain them in his Chamber, I have a feeling lurking in my mind it would be possible for us to convince him that our adjournment motions and call attention motions are quite legitimate for certain reasons. Then it is quite possible for the Hon. Speaker to come to the conclusion that the motions should be allowed. If this sort of compromise formula is adopted, we can avoid the situation that we have witnessed today hereafter.

திரு. கே. டி. கே. தங்கமணி: பொதுவாக கடந்த இரண்டு தினங்களாக இம்மாதிரியான கால் அட்டென்ஷன் நோட்டீஸ் எல்லாம் என்னவானது என்பதை அறிய முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில்கூட, தொழில் தகராறுகள் நிறைய நடந்து பலயிடங்களில் ஸ்ட்ரைக்ஸ் நடந்ததைப்பற்றி கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்திருக் கிறேன். அதற்குப் பதில் வரவில்லை. அப்படிப்பட்ட நிலை இருக்கும்போது இம்மாதிரியான கால் அட்டென்ஷன் நோட்டீஸ் ஜாஸ்தி வந்திருக்கின்றன என்ற நிலையில் எதிர்க்கட்சித் தலைவர்களையும் அதேமாதிரி ஆளும்கட்சித் தலைவர்களையும் வைத்து என்னென்ன வந்திருக்கின்றன, எந்தளவிற்கு அனு மதிக்கலாம் என்ற அளவிற்காவது கொஞ்சம் கலந்து கொண்டு—உங்களுக்குப் பரிபூரண அதிகாரம் இருக்கிறது—இரண்டு மூன்று தினங்கள்தான் மன்றம் கூடுவதன் காரணமாக சில முக்கியமான விஷயங்களை மட்டும் அனுமதிப்பதற்கு நீங்கள் முடிவு எடுப்பது கொஞ்சம் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் முதலிலேயே சொன்னேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்கி றார்கள். ஒரு கட்சிக்காரர்கள் வெளிநடப்பு செய்தார்கள். இது அரசாங் கத்தைக் குறை கூறியதாக மட்டும் ஆகாது. இந்தச் சட்டமன்றத்தையும், சட்டமன்றத் தலைவரையும், அவர்களது நடவடிக்கைகளையும் குறை கூறுவ தான நிலைமையே தவிர வேறு அல்ல, அதற்கான முகாந்திரங்கள் வேண்டும். பேரவைத் தலைவரின் அறையில் காரியங்கள் விவாதிக்கப்படுகின்றன. நல்ல முறையில் நடைபெறுகின்ற இந்த சட்டமன்றத்தில் இப்படியெல்லாம் செய்வது என்பது ரிஃப்ளக்ஷன் இல்லையா என்றுதான் கேட்கிறேன். குறை கூறுவதற்கு இதை சந்தர்ப்பமாக ஆக்கிக்கொள்ளமல் எல்லாக் கட்சித் தலைவர்களும் சிந்தித்து, இப்போதே அல்ல, இது பற்றி ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Members should be given freedom to walk-out of the house.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த மன்றத் தில் உறுப்பினர்களுக்கு உரிமைகள் இருக்கின்றன என்றாலும் அவைகள் எல் லாம் வரையறுக்கப்பட்டிருக்கிற உரிமைகள் என்பதை நாம் யாரும் மறுப்ப தற்கில்லை. இங்கே அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற ரூல் 41 தீர்மானம்

1971 அக்டோபர் 23] [டாக்டர் மு. கருணாநிதி]

என்பது ஏதோ இந்த அரசாங்கத்தினால் அல்லது அமைச்சர்களால் பதில் சொல்ல இயலாத ஒன்று என்ற அச்சம் காரணமாக அவை புறக்கணிக்கப்பட்டு விட்டன அல்லது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்ற தவறான கருத்து நாட்டுக் குத்தரப்பட்டு விடக்கூடாது என்று நான் கருதுகிறேன். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ரூல் 41-ல் மூன்று விஷயங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குத் தங்களது அறையிலிருந்து அவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணையில் இரண்டு விஷயங்கள் மறுக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவது விஷயம் ஏற்கப்பட்டிருக்கிறது. அது இந்த அவையில் ஒரு நாள் விவாதத்திற்கு ரூ. 41-ன் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பது 'about the increase of fares in the State Transport buses' என்பது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. பஸ் கட்டண உயர்வைக் குறித்துக் காட்டக்கூடிய ஒன்றைப் பற்றி ரூல் 41-ன் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது, மற்ற இரண்டும், ஒன்று மதுவிலக்கைப் பற்றியது, மற்றொன்று பொதுவாக விலைவாசியைப் பற்றியது. தாங்கள் எழுதியிருக்கிற கடிதத்தில் இவைகள் 'matter lacks urgency' என்ற குறிப்பில் அவைகள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. மதுவிலக்கைப் பற்றி வருகிற பில்லில் தாராள மாகப் பேசிக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிற காரணத்தினால், அதை ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை என்ற அளவிற்கு தாங்கள் அவர்களுக்குப் பதில் அனுப்பியிருக்கிறீர்கள். அதேபோல்தான் விலைவாசி பற்றியதும். பஸ் கட்டணத்தைப் பற்றியதும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டு ரூல். 42-ன் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளது. அதேபோல் இல்லாமல் பொதுவாகக் குறிப்பிட்டிருக்கிற காரணத்தினால் அது பொதுவான ஒரு விஷயம் என்ற அளவில் அது தள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் அதை ஒரு பரபரப்புக்குரிய விஷயமாக ஆக்க வேண்டுமென்பதற்காக இந்தச் சபையிலிருந்து வாக்-அவுட் செய்வது என்பது ஜனநாயகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறைதான் என்றாலும் அதையும் அடிக்கடி செய்தால் சலித்துப் போய் விடும், புளித்துப் போய்விடும். முறைகள் இருக்கலாம். ஆனால் அந்த முறைகளை எப்போதாவது ஒரு முறை செய்தால் தான் அதற்குப் பலன் உண்டு.

உத்தமர் காந்தி அடிகள் அவர்கள்கூட உண்ணாவிரத முறை உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையாக இருந்தாலும் அதற்காக அவர்கள் உண்ணாவிரதத்தை வாரத்திற்கு ஒரு முறை அல்லது மாதத்திற்கு ஒரு முறை அனுஷ்டித்து அதை ஸ்டேலாக ஆக்கிவிடவில்லை. தகுந்த நேரம் பார்த்து அதைப் பயன்படுத்திப் பல நேரங்களில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஒருசில நேரங்களில் தோல்வி ஏற்பட்டாலும் அதை வெற்றிக்குப் படியாக அந்தத் தோல்வியைக் கூட ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எப்போதும் வாக்-அவுட், வாக்-அவுட் என்றால் பலன் இருக்காது. தாங்கள் மிக உருக்கமாக இங்கே எடுத்துக் காட்டியதுபோல், இது தங்களை மட்டுமல்லாமல் இந்த அவையைப் பெரிது படுத்தாமல் அடிக்கடி வெளிநடப்புச் செய்வது வருந்தத் தக்கதாகும். ஆகவே இந்த அவையின் சார்பிலும், அவை முன்னவர் சார்பிலும், அவை உறுப்பினர்கள் சார்பிலும் சொல்லிக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய காங்கிரஸ் (ஓ) கட்சியைச் சார்ந்த நண்பர்கள் அடிக்கடி இந்த முறையைப் பின்பற்றுவதில் எனக்குள்ள ஆழ்ந்த வேதனையைப் புலப்படுத்தி அமைகின்றேன்.

DR. H. V. HANDE : Sir, on a point of order.......

MR. SPEAKER : Let the hon. Member resume his seat.

DR. H. V. HANDE : Sir, I am raising a point of order.

MR. SPEAKER : What is the point of order ?

### (7) நடை முறைக் கேள்வி.

#### ஓர் உறுப்பினருக்கு பேரவைத் தலைவர் எழுதிய கடிதத்தை முதலமைச்சர் பேரவையில் படித்தது குறித்து.

DR. H. V. HANDE : I request the Hon. Speaker to listen to me. My point of order is that any communication between the Hon. Speaker and an hon. Member is not to be read in the House and that is the procedure we have been following so far. Now, I want to know whether it is in order for the Hon. Chief Minister to read the contents of the letter sent by the Hon. Speaker to the hon. Member. That is the document in the hands of the hon. Member and its contents have been exposed. Is it proper to do so ? Also, we have given notice of call attention motions and we do not know when they are likely to be taken up. I have also given notice of a call attention motion and the Hon. Minister for Transport has also referred to it this morning. But as the Assembly is sitting for a day or two only, I do not know whether it will be taken up during this sitting or not.

It is difficult for us to know when we are going to get it. What guarantee is there that it will come day after tomorrow ?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* அவர்களுடைய குற்றச்சாட்டு எல்லாம் ரூல் 41 ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுதான். அதை விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், எல்லாம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று சொல்வது தவறு, ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது, அது என்ன காரணத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது, மற்றவைகள் என்ன காரணத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* மாண்புமிகு உறுப்பினர் சொன்னதில் எந்த விதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை. அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி அந்தக் கடிதங்களைப் படிக்கலாம், விவரம் எப்படிக் கொடுக்கலாம் என்று கேட்டார்கள். நான் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு மட்டும் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்கிறேன். சபாநாயகர் அவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் இடையே இருக்கும் விவரங்களை அவையிலே குறுக்கே கொண்டுவரும் முறை தவிர்க்கப்படவேண்டும். எல்லோரும் அவரவர்கள் விதிமுறைப்படி நடந்தால்தான், மரபுகள் காப்பாற்றப்படுவதற்கும், ஜனநாயகம் வளர்வதற்கும் அமைப்பாக இருக்கும். இங்கே கனம் உறுப்பினர் அவர்கள் அதற்கான விளக்கம் கேட்டதை விட, பேரவைத் தலைவரிடத்திலே தனியாகக் கேட்டு இருக்கலாம். சபையின் நடவடிக்கைகளில் குறுக்கே நுழைந்து அதை விவாதத்திற்குரிய பொருளாக ஆக்கி விட்டால்,